மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. அறிவிப்புகள்.

(அ) மேலவையிலிருந்து வரப்பெற்ற செய்தி.

நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1982.

கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன் வடிவு, 1982.

சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1982.

(முற்பகல் 10-20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் எதுவுமின்றி நிறைவேற்றப்பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 18/1982).

2. 1982 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 19/1982).

3. 1982 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 20/1982).

(ஆ) மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பேரவைக்குச் சில அறிவிப்புகள்.-

1982 ஏப்ரல் 1] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1982–83 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு கீழ்க் கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்:—

1. திரு. என். ஏ. பூங்காவனம்
2. திரு. எம். செல்லமுத்து.
3. திரு. எஸ். சிவராமன்.
4. திரு. ஆர். சுந்தரமூர்த்தி.
5. திரு. இ. முத்துராமலிங்கம்.
6. திரு. மு. சிவபெருமாள்.
7. திரு. ஆர்.டி. கோபாலன்
8. திரு. த. வீராசாமி
9. டாக்டர் கே.பி. இராமலிங்கம்
10. திரு. இரா. தாமரைக்கனி
11. திரு. கோவைத்தம்பி
12. திரு. எம்.ஆர். கோவேந்தன்
13. திரு. எஸ். பட்டாபிராமன்
14. திரு. எஸ். ஆண்டித்தேவர்
15. திரு. அ. செல்வராசன்
16. திரு. அ. ரகுமான்கான்

1982–83 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக்கணக்குக்குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினர்களாவர்.

இப்பேரவையின் 211-வது விதியின் கீழ் டாக்டர் கே.பி. ராமலிங்கம் அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.